Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 10.00

www.uthayan.com

சுடர் 22 வள்ளுவர் ஆண்டு 2038 மாசி 06 ஞாயிற்றுக்கிழமை (18.02.2007) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர் : 85

## இராணுவ வாகன அணியை நோக்கி யாழ். நகரப் பகுதியில் கிளைமோர்

### 3 படையினர், சிறுவன் பலி; 11 சிப்பாய்கள், 3 பொதுமக்கள் காயம்

யாழ்ப்பாணம், பெப்.18

யாழ். கண்டி வீதியில் - சோமசுந்தரம் அவனியூ சந்திக்கும் ஆஸ்பத்திரி வீதிக்கும் சமீபமாக - நேற்று முற்பகல் 10.45 மணியளவில் தொடர் வாகன அணி மீது கிளைமோர் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது.

இத்தாக்குதலில் மூன்று படையினரும் ஒன்பது வயதுச் சிறுவன் ஒருவனும் மரணமானார்கள். மூன்று பொது மக்களும் மற்றும் 11 படையினரும் காயமடைந்தனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து சென்று கொண்டிருந்த வாகனஅணியை இலக்கு வைத்து கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது. வாகன அணி செல்வதற்காக அந்தப் பகுதியில் தடுத்து வைக்கப்பட்டிருந்த மோகன் கமலன் (வயது 9) என்ற ஜோண் பொஸ்கோவில் 4ஆம் ஆண்டு கற்கும் மாணவன் உயிரிழந்தார். அவரது தந்தையாரான யாழ். இந்துக் கல்லூரி ஆசிரியர் குலநாயகம் மோகன் (வயது 46) என்பவர் காயமுற்றார். அரியாலையைச் சேர்ந்த ஆசிரியர், மகனை தனியார் கல்வி நிலையத்தில்

(03ஆம் பக்கம் பார்க்க)

## திட்டியில் இறக்கப்பட்ட 21 அகதிகள் 3 நாள்களின் பின் கரை சேர்ந்தனர்

சென்னை, பெப்.18

தனுஷ்கோடி அரிச்சல்முனை கடல் பகுதி ராமர்பாலம் மணல்திட்டியில் மூன்று நாள்களாக உணவின்றி தவித்த வவுனியாவைச் சேர்ந்த 21 அகதிகளை தமிழக மீனவர்கள் காப்பாற்றி மண்டபம் அகதிகள் முகாமிற்கு அனுப்பிவைத்தனர்.

வவுனியாவைச் சேர்ந்த 21 பேர் தலைமன்னாரில் இருந்து இராமேஸ்வரத்துக்கு படகோட்டிகள் மூலம் அழைத்துச் செல்லப்பட்டனர். அவர்கள் மணல் திட்டியில் இறக்கப்பட்டனர்.

(04ஆம் பக்கம் பார்க்க)

# போர்நிறுத்த ஒப்பந்தத்தைக் கிழித்து எறியாவிடில் பிக்குகளின் பெரும் போராட்டம் வெடிக்கும்

## உண்ணாவிரதம் இருப்பவர்களிடம் அரசு உறுதிமொழி தர வேண்டுமாம்

கண்டி, பெப்ரவரி 18

இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் செய்துகொண்ட போர்நிறுத்த ஒப்பந்தத்தை - புரிந்துணர்வு உடன்படிக்கையை - அதன் ஐந்து வருடங்கள் பூர்த்தியாவதற்கு முன்னர் எதிர்வரும் 21ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் - அரசாங்கம் கிழித்தெறியவேண்டும். அவ்வாறு செய்யவில்லையெனில் பௌத்த பிக்குகள் அரசுக்கு எதிராகப் பெரும் போராட்டத்தை நடத்துவர்.

இவ்வாறு சரித்திரப்பிரசித்தி பெற்ற தலதா மாளிகைக்கு முன் நேற்றுக் கூடிய பௌத்த பிக்குகள் பிரகடனம் செய்தனர்.

தலதா மாளிகைக்கு முன் கூடிநின்ற பல நூற்றுக்கணக்கான பிக்குகள் மத்தியில் மேற்படி பிரகடனத்தை தேசிய பிக்குகள் முன்னணியின் தலைவர் வண. தம்பர அமிலதேரர் வாசித்தார்.

போர்நிறுத்த ஒப்பந்தம் எதிர்வரும் 21ஆம் திகதிக்கு முன்னர் செல்லுபடியற்றதாக்கப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ சார்பில் அரசாங்கத்தின் பிரதிநிதி ஒருவர், கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் உண்ணாவிரதம் இருக்கும் பௌத்த பிக்குகளிடம் எழுத்தில் உறுதிமொழி தரவேண்டும் என்றும் அறிவிக்கப்பட்டது.

(04ஆம் பக்கம் பார்க்க)

## முன்னாள் அமைச்சர் ஸ்ரீபதிக்கு கொலை அச்சுறுத்தலாம்

கொழும்பு, பெப்.18

நாடாளுமன்ற உறுப்பினர் ஸ்ரீபதி சூரியாராச்சி, தனக்கு கொலை அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக நேற்றுப் பிற்பகல் பொரளைப் பொலீஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார்.

தன்னைக் கொலைசெய்யவோ அல்லது குற்றவியல் சட்டத்தின் கீழ் மரண தண்டனை விதிக்கக் கூடிய குற்றம் ஒன்றில் சிக்கவைக்கவோ திட்டம் தீட்டப்பட்டிருக்கலாம் என்று அவர் தமது முறைப்பாட்டில் தெரிவித்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அமைச்சர் பதவியில் இருந்து அவர் ஜனாதிபதியால் பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் அவருக்கான பாதுகாப்புக்களும் விலக்கப்பட்டிருந்தன.

பதவி விலக்கப்பட்டதை அடுத்து அவர்

(04ஆம் பக்கம் பார்க்க)

## பல்கலை. கல்வி செயற்பாடுகள் நாளை ஆரம்பம் தடையின்றித் தொடர காலையில் பிரார்த்தனை

யாழ்ப்பாணம், பெப்.18

யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கல்விச் செயற்பாடுகள் நாளை திங்கட்கிழமை ஆரம்பமாகின்றன. அதற்கு முன்பதாக கல்விச் செயற்பாடுகள் தடங்கல் எதுவுமின்றித் தொடரவேண்டும் என்று வேண்டுதல் செய்யும் பிரார்த்தனை நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

பல்கலைக்கழக வளாகத்தில் அமைந்துள்ள பரமேஸ்வரன் ஆலயம் மற்றும் கிறிஸ்தவ ஆலயத்தில் பிரார்த்தனைகள் இடம்பெறவுள்ளன.

இந்தப் பிரார்த்தனையில் மாணவர்களும், பல்கலைக்கழக விரிவுரையாளர்களும் பங்குகொள்வர். பல்கலைக்கழக கல்விச்செயற்பாடுகளை நாளை ஆரம்பிப்பது என நிர்வாகம் முடிவு செய்துள்ளது.

(03ஆம் பக்கம் பார்க்க)

## போர்நிறுத்த ஒப்பந்தத்தின் கதி; இணைத்தலைமை நாடுகள் ஆராயும்

### செய்மதித் தொடர்பு ஊடாகக் கலந்துரையாடல்

இலங்கை அரசுக்கும் - விடுதலைப் புலிகள் அமைப்புக்கும் இடையிலான போர்நிறுத்த உடன்பாட்டின் கதி குறித்தும், அது நெருக்கடிக்கு உள்ளாகி இருப்பது குறித்தும் இணைத்தலைமை நாடுகள் எதிர்வரும் 21ஆம் திகதி அவசரமாக ஆராய உள்ளன.

போர் நிறுத்த உடன்பாடு ஐந்தாண்டைப் பூர்த்தி செய்யும் தினமான 21ஆம் திகதி இக்கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது.

செய்மதித் தொலைத்தொடர்பு வசதிகள் மூலம் ஜப்பான், அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், நோர்வே ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் இந்தக் கலந்துரையாடலில் பங்குபற்றுவர்.

இலங்கையின் போர்நிறுத்த உடன்பாடு எதிர்வரும் 21ஆம் திகதி ஐந்தாண்டைப் பூர்த்திசெய்வது குறித்தும், அதன் எதிர்காலம் குறித்தும் - இக்கலந்துரையாடலில் ஆராயப்படவுள்ளன.

செய்மதி மூலம் இடம்பெறவுள்ள இக்கலந்துரையாடலில் ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாஷி, நோர்வே அபிவிருத்தி அமைச்சர் எரிக் சொல்ஹெய்ம், நோர்வேயின் விசேட சமாதானத் தூதுவர் ஜோன் ஹான்சன் போவர் அமெரிக்காவின் பிரதிநிதி றிச்சட் பௌசர் மற்றும் ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகள் பங்கு கொள்ளவுள்ளனர். (அ-1-4)

## வெளி மாவட்டங்களில் இருந்து உணவுப் பொதிகள் ஏற்பது நிறுத்தம்

### பிரதித் தபால்மா அதிபர் தகவல்

யாழ்ப்பாணம், பெப்.18

வெளிமாவட்டங்களில் இருந்து உணவுப் பொருள் அடங்கிய தபாற் பொதிகளை குடாநாட்டுக்கு எடுத்துவரும் பணி நிறுத்தப்பட்டுள்ளது.

யாழ். பிராந்திய பிரதித் தபால் மா அதிபர் எம். குமரகுரு இத்தகவலை நேற்றிரவு உதயனுக்குத் தெரிவித்தார்.

கடந்த ஓகஸ்ட் மாதம் 11ஆம் திகதி உருவான அசாதாரண சூழ்நிலையை அடுத்து குடாநாட்டு மக்களுக்கு அவர்களது உறவினர்கள் ஏனைய மாவட்டங்களில் இருந்து உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களை தபாற்பொதிகள் மூலம் அனுப்பி வந்தனர்.

அத்தகைய தபாற் பொதிகளை எடுத்து வருவதற்கு கட்டணம் செலுத்தவேண்டும் என்று அத்தியாவசிய சேவைகள் திணைக்களம் கோரியுள்ளது. ஆயினும் அத்தகைய கட்டணங்களை வழங்க தபால் சட்டத்தில் இடமில்லாத காரணத்தால் தபாலில் அனுப்பப்படும் உணவுப் பொதிகளை ஏற்றுக்கொள்வதை நிறுத்தியுள்ளதாக தபால் மா அதிபர் முடிவு செய்துள்ளதாக பிரதித் தபால்மா அதிபர் மேலும் தெரிவித்தார்.

எனினும் -

ஒரு கிலோ நிறையுடைய மருந்துப் பொருள்கள் அடங்கிய பொதிகளை மட்டும் யாழ்ப்பாணத்துக்கு எடுத்துவருவதற்கு ஏனைய மாவட்டத் தபாலகங்களில் அவை ஏற்றுக்கொள்ளப்படும் என்று அவர் தெரிவித்தார்.

அதேவேளை -

கொழும்பில் உள்ள 1,609 தபால் பொதிகளையும் திருமலையில் உள்ள 325 தபால் பொதிகளையும் கப்பல் மூலம் எடுத்துவர ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

ஏற்கனவே வெளிமாவட்டத் தபாலகங்களில் ஒப்படைக்கப்பட்டு திருகோணமலை

(04ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியாவில் சம்பவங்கள் மூன்று: பொதுமக்கள் இருவர் மரணம்; மூவர் காயம்

வவுனியா, பெப்.18

வவுனியாவில் கடந்த இரண்டு நாள்களில் நடைபெற்ற மூன்று வெவ்வேறு சம்பவங்களில் பொதுமக்கள் இருவர் கொல்லப்பட்டனர்; மூவர் காயமடைந்தனர்.

கூமாங்குளம் பகுதியில் நேற்று நண்பகல் படையினர் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் பொதுமகன் ஒருவர் கொல்லப்பட்டார்; மற்றும் இருவர் காயமடைந்தனர்.

மரணமானவர் சின்னராசா சுரேஸ் (வயது 18) என்று இனம் காணப்பட்டுள்ளது. இ[illegible] ரகுவரன் (வயது 17), லோகேஸ்வரன் (வயது 36) ஆகியோர் காயமடைந்தனர்.

இதேவேளை, நேற்றுக்காலை 9.40 மணியளவில் வவுனியா பண்டாரிக்குளம் பகுதியில் கிளைமோர் குண்டுத்தாக்குதல் ஒன்று நடத்தப்பட்டது. அதன்போது இராணுவத்தினருக்கோ பொலிஸாருக்கோ சேதம் எதுவும் ஏற்படவில்லை என்று வவுனியா பொலிசார் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலை அடுத்து அப்பிரதேசத்தில் சுமார் 30 நிமிடங்கள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகப் பிரதேசவாசிகள் தெரிவித்தனர்.

(04ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பிறந்த நாள் வாழ்த்தும், பாராட்டி வாழ்த்தும்



மந்துவில் கிழக்கைச் சேர்ந்த
தர்மகுலசிங்கம் - தவமலர் தம்பதியின்
செல்வப் புதல்வன் தர்ஷன்

யாழ்/ சாவகச்சேரி இந்து ஆரம்ப பாடசாலையில் கல்வி கற்று 2006இல் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சையில் 142 புள்ளிகளைப் பெற்றுச் சித்தியடைந்துள்ள இவரைப் பாராட்டி வாழ்த்துவதுடன், இவருக்கு கல்வி கற்பித்த அதிபர், ஆசிரியர்கள் மற்றும் பிரத்தியேக வகுப்பு மூலம் கல்விகற்பித்த வே. அன்பழகன் ஆசிரியர் அனைவரையும் பாராட்டுவதுடன், அவருடைய பிறந்த நாளாகிய இன்று (18.02.2007) அவர்மேலும் கல்வியில் சிறந்து விளங்க எல்லாம் வல்ல இறைவனின் அருள் வேண்டி வாழ்த்துகிறோம்.

வாழ்த்துபவர்கள்:
தர்மகுலசிங்கம் (அப்பா),
தவமலர் (அம்மா).

மந்துவில் கிழக்கு,
கொடிகாமம்.
(58246)




## கிருஷ்ணா திருமணசேவை
(K.V.D. 404)

வடமராட்சி, வலிகாமம்

பெண் Australia Doctor மிருகசீரிடம் கி.பா 7 1/2, 76ஆம் ஆண்டு, வெளிநாட்டிலோ / உள் நாட்டிலோ டாக்டர் / இன்ஜினியர் மணமகன் தேவை. வெளிநாட்டு சிற்றிசன் மணமகன்/மணமகன் உண்டு, 77.11.08 4ஒல் CIMA Accountant கி.பா. 17 1/4 இன்ஜினியர் மண மகன் தேவை. கொழும்பில் வீடு உண்டு. 76 ஆம் ஆண்டு Electronic Engineer ஆயிலியம் கி.பா. 32. 74ஆம் ஆண்டு Civil Engineer பூசம் கி.பா. 39. (Singapore). 74ஆம் B. Sc. M. Fill Engineer (Sweden) பூசம் 35 3/4 கி.பா. பட்டதாரி மணமகன் தேவை.
R.C. 71ஆம் ஆண்டு B.B.A. பட்டதாரிக்கும் அதே சமயத்தில் பட்டதாரி மணமகன் தேவை.

பாரதிதாசன் வாசிகசாலை மேல்மாடி,
அல்வாய் கிழக்கு, அல்வாய்.
T.P: 077 5018175.

## விற்பனைக்கு

தனிப்பாவனையில் உள்ள ALLOW WHEEL பொருத்தப்பட்ட புதிய KA - xxxx Suzuki SWIFT MOTOR CAR விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு - 0773413709.

## விற்பனைக்கு

சகல விதமான ஆங்கில மருந்துகளும் நீரிழிவு நோயாளருக்கான இன்சுலின் வகைகளும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு: இளவரசி வைத்தியசாலை,
132, கச்சேரி நல்லூர் றோட்,
யாழ்ப்பாணம்.

## வீடு வாடகைக்கு

சாவகச்சேரி நகர்ப்பகுதியில் ஏ-9 வீதியில் பல அறைகளைக் கொண்ட (மேல் மாடியிலும் இரண்டு அறைகள் உண்டு) சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்கு உண்டு. அரச, அரச சார்பற்ற நிறுவனங்களின் பாவனைக்கு மிகவும் உகந்தது.
தொடர்பு: வ. இராசதுரை (SEASONS)
291, 293, கண்டி வீதி, சாவகச்சேரி.

## தினசரி விமானசேவை

கொழும்பு -யாழ்.
யாழ். -கொழும்பு
DAYA AVIATION நிறுவனத்தினால் நான்கு பேர் பயணிக்கக்கூடிய இரு வழிப்பாதை தினசரி சிறுவிமான சேவை உத்தரவாதத்துடன் நடத்தப்படுகின்றது.
ஒரு வழிப்பாதைக்கான கட்டணம்
ரூபா 30,000/=
உடனடிப்பயணத்துக்கு .
தொடர்பு கொள்ளவும்.
தொ.பே.: 0114969116/ 0114542190
பக்ஸ்: 0114542360
மொபைல்: 0773846681

## தேவை

புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ள தையல் நிலையத்திற்கு அனுபவமுள்ள பெண்கள் பொறுப்பாகவும் பங்கு அடிப்படையிலும் இயங்குவதற்கு யாழ்ப்பாணத்தின் சகல பிரதேசங்களிலும் தேவை.
விளம்பர இல. 2952,
மே/பா உதயன், யாழ்ப்பாணம்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

தோற்றம் 06 ★ 11 ★ 1990



மறைவு 06 ★ 01 ★ 2007

### அமரர் சிறிகுகன் கிருஷாந்

06.01.2007 அன்று இறைவனடி சேர்ந்த எனது அன்பு மகனின் இறுதிக்கிரியையில் கலந்து எனது துயரத்தைப் பகிர்ந்துகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் நாளை (19.02.2007) திங்கட்கிழமை எனது இல்லத்தில் நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்தில் கலந்துகொள்ளுமாறும் இதை தனிப்பட்ட அழைப்பாக ஏற்று அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்குமாறும் வேண்டுகின்றேன்.

கொத்தியகாடு,
தொண்டைமானாறு.
(க-52011)
சிறிகுகன் (தந்தை).

## மாதமொன்றின் நினைவஞ்சலி

மண்ணில் 14 ★ 07 ★ 1941



விண்ணில் 11 ★ 01 ★ 2007

### திருமதி ஆழ்வாப்பிள்ளை சிவதங்கமலர்
(சந்திராஸ் உரிமையாளர், யாழ்ப்பாணம்)

என்றும் எம் நெஞ்சில் நிறைந்த மலர்
இன்முகம் காட்டி எம்மைக் காத்த மலர்
இன்று எம்மைவிட்டு இறையடி சேர்ந்த மலர்
என்றும் எம் நினைவில் நிற்கும் தங்க மலர்

இன்று (18.02.2007) முற்பகல் 10.30 மணிக்கு அன்னாரின் நினைவாக அவரின் இல்லத்தில் 'தங்கமலர்' என்னும் சிறுவர் பாடல் நூல் வெளியீடு இடம்பெறும். இந்நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு வேண்டுகிறோம்.

"சந்திரபவனம்",
அல்வாய்.
(58252)
ஆ. ஜெயச்சந்திரன் (சந்திரன்).
ஆ. சரச்சந்திரன் (ரமேஷ்).

## மரண அறிவித்தல்கள்

### கந்தையா சதாசிவம்

புங்குடுதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் 250, பழம்றோட், கந்தர்மடத்தை வதிவிடமாகவும் கொண்ட கந்தையா சதாசிவம் நேற்று காலமானார்.

அன்னார் இராசமணியின் கணவரும் ஜேர்மனியை வதிவிடமாகக்கொண்ட ஜெயதேவி, டில்விராணி, ஜீவதாரிணி ஆகியோரின் தந்தையும் சிவயோகநாயகம், சச்சிதானந்தன், தவச்செல்வன் ஆகியோரின் மாமனும் பிரசாத், பிரதாப், பிரஹாஸ், ஜெயிலி ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.02.2007) மு.ப. 10.30 மணிக்கு கோம்பையன் மணல் இந்து மயானத்தில் தகனஞ் செய்யப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: ந.பத்மநாதன்,
ஜெயதேவி மற்றும்
சகோதரிகள்.

250, பழம்றோட்,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

### திருமதி மகாலிங்கம் இந்திராதேவி

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் கனடாவை வசிப்பிடமாகவும் கொண்ட மகாலிங்கம் இந்திராதேவி 16.02.2007 கனடாவில் காலமானார்.

அன்னார் கணபதிப்பிள்ளை (ஓய்வுபெற்ற இ.போ.ச. சாரதி)- தங்கம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்ற கந்தையா - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் (ஏழாலை) கந்தையா மகாலிங்கத்தின் (ஓய்வு பெற்ற தபால் அதிபர்) அன்பு மனைவியும் ஜங்கரன், உமாசங்கர், துஸ்யந்தி, திருநிறைச்செல்வி (கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் கமலா தேவி (கனடா), சகுந்தலாதேவி (கனடா), கணேசமூர்த்தி (ஜேர்மனி), நிர்மலாதேவி (ஜேர்மனி) ஆகியோரின் பாசமிகு சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் நாளை (19.02.2007) கனடாவில் உள்ள ரொரன்டோ மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்னர் தகனக்கிரியைகள் இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.
தொ.பே.: 077 6157356 (ஏழாலை),
0014165518103 (கனடா).

தகவல்:
T. கண்ணன்,
கண்ணகை அம்மன் கோயிலடி,
[illegible]

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 23 ★ 05 ★ 1923



மறைவு 28 ★ 02 ★ 2006

### பொன்னையா நாகலிங்கம்
(ஓய்வுபெற்ற ஊழியர் - போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்)

திதி: 18.02.2007

அன்பின் பிறப்பிடமாக இருந்து எங்களை
நல்வழி நடத்திய ஐயாவே!
எங்களைப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் எங்கள்
இதயத்தில் நீங்கா நினைவுகளுடன் வாழ்கின்றீர்கள்.
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் நினைவுடன் வாழ்கின்ற
அன்பு மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

43/1, யமுனா வீதி,
நல்லூர்.
(58235)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09 - 04 - 1924



மறைவு 28 - 02 - 2006


### அமரர் சின்னத்தம்பி மார்க்கண்டு

அன்பின் உறைவிடமாய்
அமைதியின் திருவுருவமாய்
பாசத்தின் இருப்பிடமாய்
இதயத்தில் கலந்த எம் தெய்வமே!
எம்மோடு நீங்கள் வாழ்ந்த காலங்களும்
உங்கள் அன்பான திருவுருவமும்
என்றும் எம் நெஞ்சைவிட்டகலாது.

மயிலங்காடு (பிள்ளையார் கோயிலடி),
ஏழாலை தெற்கு.
(58253)
- குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவலைகள்

தோற்றம் 11 - 11 - 1933



மறைவு 19 - 01 - 2007

### அமரர் தம்பிராசா இராசரத்தினம்
(இளைப்பாறிய அதிபர், யா/வல்வெட்டித்துறை றோமன் கத்தோலிக்க தமிழ்க் கலவன் பாடசாலை)

கும்பவாழி வீரகத்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் தலைவர், செயலாளர், பொருளாளராகவும் திருப்பணிச் சபை பொருளாளராகவும் தொடர்ந்து பதவியிலிருந்து பணியாற்றிய அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல கும்பவாழி வீரகத்தி விநாயகர் அருள் புரிவாராக.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.
(க.52029)
கும்பவாழி வீரகத்தி விநாயகர் ஆலய
பரிபாலனசபை.

## மரண அறிவித்தல்

### S.முத்துக்குமாரு
(S.M. Hardware முன்னாள் உரிமையாளர்)



திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும், தற்போது லண்டனில் வசித்தவருமாகிய செ.முத்துக்குமாரு 14.02.2007 புதன்கிழமை லண்டனில் சிவபதம் அடைந்துள்ளார்.

அன்னார் அமரர்களான செல்லத்துரை - முத்தாச்சி தம்பதியரின் புதல்வரும், காலஞ்சென்ற சிவகாமசுந்தரியின் அன்புக் கணவரும், அமரர் பாலசுந்தரம், கமலாம்பிகை (மலேசியா) ஆகி யோரின் சகோதரரும் கிருபானந்தா, யோகனந்தா, நித்தியானந்தா, பிறமானந்தா, ஸ்ரீகாயத்திரி, உருத்திரானந்தா, கோவிந்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் பத்மாவதி, அனுஷியா, செல்வராணி, மாலினி, குணபாலசிங்கம் , கலையரசி, விஜயா ஆகியோரின் அன்பு மாமனும் யாதவன், சிந்துஜன், ஜனனி, தினேஸ், பிர மிளன், நவநித், ஹரணி, பிரவீன், சதானந்தா, பிரவாணி, பவன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் 20.02.2007 செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணியளவில் லண்டனில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
மு.உருத்திரானந்தா (மகன்)
உரிமையாளர், S.M. Hardware, யாழ்ப்பாணம்.
தொலைபேசி இல. 021 222 6856.

802, பலாலி வீதி,
திருநெல்வேலி.
(58267)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
தொ.பே., தொ.ந.: 222 3837

## மங்கள சமரவீரவின் கருத்தில் புதைந்து கிடக்கும் உண்மைகள்

யாழ். குடாநாட்டிலும் தமிழர் தாயகத்தின் ஏனைய பகுதிகளிலும் சீருடையினராலும், இனந்தெரியாத குழுவினராலும் ஆள்கள் கடத்தப்படல், படுகொலை செய்யப்படல் மற்றும் காணாமற்போதல் போன்ற மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் கட்டுமட்டின்றி மேற்கொள்ளப்படுகின்றன. இந்தக் கொடூரத்தின் பேரச்சத்தில் தமிழர் தாயகம் மூழ்கிக் கிடக்கின்றது.

இந்த மனிதப் பேரவல நிலை இப்போது மிக மோசமான கட்டத்தை அடைந்தமைக்கு அரச பயங்கரவாதம், புதிய ராஜபக்ஷ அரசின் நிர்வாகத்தின்கீழ் கட்டவிழ்த்து விடப்பட்டமையே பிரதான காரணம் என்பதைத் தமிழர் தரப்பு திரும்பத் திரும்ப வலியுறுத்தி வருகின்றது.

கடந்த வாரம்வரை ராஜபக்ஷவின் அரசில் மூத்த -முக்கிய-அமைச்சராக இருந்த மங்கள சமரவீர இப்போது வெளியிட்டிருக்கும் கருத்து இவ்விடயத்தில் உண்மை என்னவென்பதை ஓரளவேனும் ஊகிக்கக்கூடிய வாய்ப்பைத் தந்திருக்கின்றது.

தமக்கு எதிராக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அடுக்கிய குற்றச்சாட்டுகளுக்கு, முன்னாள் அமைச்சர் மங்கள சமரவீர விளக்கமாகவும், விவரமாகவும், பகிரங்கமாகவும் பதிலளித்திருக்கின்றார். அந்தப் பதிலில் அவர் தெரிவித்த சில பகுதிகள் கவனிக்கத்தக்கவை.

*"நான் வெளிவிவகார அமைச்சராக இருந்த சமயம், இருபத்தைந்து நாடுகளைக் கொண்ட ஐரோப்பிய யூனியனினால் புலிகளைத் தடை செய்ய வைத்தேன். இதற்காக மிகக் கடுமையாக நான் உழைத்தேன். ஒட்டுமொத்தமாக ஐரோப்பிய யூனியன் புலிகளைத் தடைசெய்யும் தீர்மானத்தை எடுத்தாலும், அந்த யூனியனில் அங்கம் வகிக்கும் ஒவ்வொரு நாடும், அதற்கான சட்ட வலிமையை அளிக்கும் சட்டங்களைத் தத்தமது நாடுகளில் தனித்தனியாக உருவாக்கிக் கொண்டால்தான் புலிகள் மீதான தடை முழு அளவில் அங்கு நடைமுறைக்கு வரமுடியும். ஆகையினால், அச்சட்டங்கள் அந்த நாடுகளில் உருவாக்கப்படும் வரையாவது - நமது தற்காப்பு இராணுவ நடவடிக்கைகளின் போதும் சரி - மனித உரிமை மீறல்கள், ஆள்கடத்தல்கள், ஊடகங்களைத் தொல்லைப்படுத்துதல், வழிபாட்டு இடங்களைத் தாக்குதல், வைத்திய சாலைகள் மற்றும் பாடசாலைகள் மீது தாக்குதல் நடத்துதல் போன்றவற்றைத் தவிர்ப்பதற்கு நாம் உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என நான் அவசரமாக வேண்டுகோள் விடுத்திருந்தேன். ஜனாதிபதியாகிய உங்களிடமும், உங்களின் பாதுகாப்பு அமைச்சின் செயலாளரான உங்கள் சகோதரரிடமும் இந்த வேண்டுகோளை நான் முன்வைத்தேன்"* - என்று ஒப்புதல் வாக்குமூலமளித்திருக்கின்றார் முன்னாள் வெளிவிவகார அமைச்சரான மங்கள சமரவீர.

இந்தக் கருத்தினூடாக சில விடயங்களை அவர் சொல்லாமல் சொல்லுகின்றார் - வெளிப்படுத்துகின்றார் - என்பது கவனிக்கத்தக்கது.

* ஆள்கடத்தல்கள், ஊடகங்களைத் தொல்லைப்படுத்துதல், வழிபாட்டு இடங்கள், வைத்தியசாலைகள், பாடசாலைகள் போன்றவை தாக்கப்படுதல் போன்ற மனித உரிமை மீறல் நடவடிக்கைகள் அரசுத் தரப்புடன் சம்பந்தப்பட்டு இடம்பெறுகின்றன.

* ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் புலிகளைத் தடைசெய்யும் சட்டங்களை நிறைவேற்றும்வரை இந்த மனித உரிமைகள் - இது போன்ற அத்துமீறல்கள் - நடைபெறவில்லை என்று வெளிப் பகட்டுக்குக் காட்டும் எத்தனப் போக்கு அரசுத் தரப்பில் இருந்தது.

* ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் புலிகளைத் தடைசெய்யும் சட்டங்களைத் தத்தமது நாடுகளில் நிறைவேற்றும் வரையாவது இந்த மனித உரிமை மீறல்களை நிறுத்தும்படி அரசின் மூத்த அமைச்சர் அரசைக் கோரியிருப்பதால், இத்தகைய சட்டங்கள் ஐரோப்பிய ஒன்றிய நாடுகளில் நிறைவேற்றப்பட்டு நடைமுறைக்கு வந்தபின்னர், இத்தகைய மனித உரிமை மீறல்களைத் தாராளமாக மேற்கொள்ளலாம் என்ற மனப்பாங்கே அரச மேலிடத்தில் காணப்பட்டது.

- மங்களவின் மேற்படி கருத்திலும், தகவலிலும் இந்த உள்ளார்ந்த அம்சங்களே தொக்கி நிற்கின்றன.

இத்தகைய மனித உரிமை மீறல் சம்பவங்களில் அரசுக்கும் அதன் படைகளுக்கும் தொடர்பு ஏதுமில்லை என்றும் இத்தகைய மனித உரிமை மீறல்கள் இடம்பெறவே இல்லை என்றும் சர்வதேச சமூகத்துக்குக் காட்டுவதற்கு அரசு கங்கணம் கட்டியிருக்கும் இந்தச் சமயத்திலேயே இவ்வளவு மோசமாக தமிழர் விரோத அரச பயங்கரவாதம் மோசமான மனித உரிமைகளைச் செய்து வருகின்றது.

அப்படியானால் -

புலிகளைத் தடைசெய்வதற்குக் கொள்கை ரீதியாக ஒன்றுபட்டு முடிவெடுத்த ஐரோப்பிய ஒன்றிய யூனியனின் அங்கத்துவ நாடுகள் அனைத்தும், அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் விதத்தில் புதிய சட்டங்களைத் தத்தமது நாட்டில் நிறைவேற்றிக் கொள்ளுமாயின் -

அதன் பின்னர் இலங்கையில் தமிழர்களுக்கு எதிரான அரச பயங்கரவாதம் எவ்வளவு மோசமாக அரங்கேறும் என்பது நினைத்துப் பார்க்கப் பேரச்சம் தருவதாக உள்ளது.

இத்தகவல்கள் அனைத்தும் புலிகளைத் தடைசெய்யும் தீர்மானத்தை எடுத்த ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கத்துவ நாடுகளுக்குச் சமர்ப்பணம்.

## மக்களுக்கு விநியோகத்திற்கென வழங்கப்படும் பொருள்களை இருப்பில் வைக்கக்கூடாது

### அரச அதிபர் ப.நோ.கூ. சங்கங்களுக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.18

பொது மக்களுக்கு விநியோகிப்பதற்கென யாழ். செயலகத்தால் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருள்களை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் எக்காரணம் கொண்டும் இருப்பில் வைத்திருக்கக்கூடாது.

இவ்வாறு கண்டிப்பான உத்தரவைப் பிறப்பித்துள்ளார் யாழ். அரச அதிபர் கே.கணேஷ்.

குடாநாட்டில் அத்தியாவசிப் பொருள்கள் விநியோகம் தொடர்பாக ஆராய்வதற்கான கூட்டம் ஒன்று நேற்றுக்காலை யாழ். செயலகத்தில் நடைபெற்றது. பலநோக்குக் கூட்டுறவுச் சங்களின் தலைவர்கள், பொது முகாமையாளர்கள், பிரதேச செய லர்கள், கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஆகியோர் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண் டனர்.

இந்தக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அரச அதிபர் மேற்கண்ட உத்தரவைப் பிறப்பித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது-

பொதுமக்களுக்கு விநியோகிப்பதற்கென செயலகத்தால் வழங்கப்படும் எந்தவொரு பொருளையும் கூட்டுறவுச் சங்கங்கள் தமது களஞ்சியங்களில் இருப்பில் வைத்திருக்கக்கூடாது அவற்றை உடனடியாக மக்களுக்கு விநியோகிக்கவேண்டும்.

அந்தந்தப் பகுதிகளின் பிரதேச செயலர்கள் இதனை உறுதி செய்துகொள்ளவேண்டும்.

அரச அதிபரால் அறிவிக்கப்பட்ட விலைக்கே பொருள்கள் விற்பனை செய்யப்படவேண்டும். சில கூட்டுறவுச் சங்கங்கள் சில முக்கிய பொருள்களை தமது களஞ்சியங்களில் இருப்பில் வைத்துள்ளதாக முறைப்பாடு கிடைத்துள்ளது. அவற்றை உடன் விநியோகிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லாவிட்டால் அவர்கள் மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும். சகல கூட்டுறவுச் சங்கங்களும் ஒரே மாதிரியான விலைப்பட்டியலைக் கடைப்பிடிக்கவேண்டும் - என்றார் அரச அதிபர்.

தனியார் வியாபாரிகள் எவரும் யாழ்ப்பாணத்துக்கு கப்பல் மூலம் மா எடுத்துவரவில்லை இத்தகைய சூழ்நிலையில் மா வெளிச்சந்தையில் அதிக விலைக்கு விற்பனை செய்யப் படுகின்றது. இதற்குக் காரணம் கண்டறியப்பட வேண்டும்.

இந்தக் கூட்டத்தில் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. அவற்றில சில வருமாறு:-

* ஒவ்வொரு பொருள் விநியோகத்தின் போதும் பொருள்களின் விலைப்பட்டியல் யாழ். செயலகத்தால் கூட்டுறவுச் சங்கங்களுக்கு அனுப்பிவைக்கப்படும்.

* செயலகத்தால் வழங்கப்படும் பொருள்கள் இருப்பில் வைக்கப்படாமல் மக்களுக்கு விநியோகிக்கப்படவேண்டும்.

* யாழ்.செயலகத்தால் வழங்கப்படும் அத்தியாவசியப் பொருள்களுக்கான வழங்கல் கட்டளைகளை உடன்பெற்று பொருள்களைப் பெறவேண் டும்.

* யாழ்ப்பாணம், நீர்வேலி, மானிப்பாய், சுன்னாகம் ஆகிய கூட்டுறவுச் சங்கங்கள் தமது விநியோக நடவடிக்கைகளை விரைவில் சீராக்கிக் கொள்ள வேண்டும்.

* சங்கங்களில் மேலதிகமாக உள்ள அரிசியை பிரதேச செயலரின் அனுமதியுடன் தனியார் வியாபாரிகளுக்கு விநியோகிக்கலாம்.

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு உள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் இந்தக் கூட்டத்தில் ஆராயப்பட்டது. (அ-8)

## கல்வியைச் சீர்குலைக்காது பாடசாலைக்குச் சமுகமளியுங்கள்

### படைத்தரப்பில் மாணவருக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.18

மாணவர்கள் தங்கள் கல்வியைச் சீர்குலைக்க எவருக்கும் இடமளிக்காது பாடசாலைக் கல்வியைத் தொடர்ந்து மேற்கொள்ள வேண்டும்.

பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் ஊடகங்களுக்கு விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேற்கண்டவாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

கல்வியைச் சீர்குலைப்பவர்களது உத்துதலால் ஏமாற்றமடைந்து பாடசாலையைப் பகிஷ்கரிப்பில் மாணவர்களாகிய நீங்கள் முன்னர் ஈடுபட்டமையால் உங்கள் கல்விதான் பாதிக்கப்பட்டது. எனினும் பாடசாலைகளைப் பகிஷ்கரித்ததால் எதிர்காலத்தில் உங்களுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகளை ஊடகங்கள் மூலம் அண்மைக் காலங்களில் சுட்டிக் காட்டி இருந்தோம். அந்த அறிவித்தலை கவனத்தில் கொண்டு நிலைமையை நீங்கள் புரிந்து கொண்டமை குறித்து நாம் மகிழ்ச்சி அடைகின்றோம்.

அதுபோலவே, இனிமேலும் இவ்வாறான செயற்பாடுகளுக்கு இடமளிக்காது உங்கள் கல்வியைத் தொடருங்கள். இதுவரை பாடசாலைக்குச் சமுகமளிக்காத உங்கள் சகோதர மாணவர்களுக்கும் இவ்விடயத்தைத் தெளிவுபடுத்தி அவர்களையும் பாடசாலைக்கு அழைத்துச் செல்லுங்கள்- என்று பாதுகாப்பு நடவடிக்கைகள் தலைமையகம் அறிவுறுத்தியுள்ளது. (அ-203)

## சுழிபுரத்தில் மீண்டும் இராணுவ முகாம்

சுழிபுரம், பெப்.18

சுழிபுரம் தபால் நிலையத்துக்கு அருகில் மீண்டும் இராணுவ முகாம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

கடந்த மாதம் அங்கிருந்து மூடப்பட்ட இந்த முகாம், மீண்டும் அமைக்கப்பட்டுள்ளது. படையினரின் ரோந்து நடவடிக்கைகளும் மீண்டும் அதிகரிக்கப்பட்டுள்ளது. (1-28)

## போக்குவரத்துச் சபைக்குத் தேவையான உதிரிப்பாகங்கள் விரைவில் கப்பல் மூலம்

### அரச அதிபர் நடவடிக்கை

யாழ்ப்பாணம், பெப்.18

வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்களுக்குத் தேவையான ரயர், ரியூப், உராய்வு நீக்கி எண்ணை(**Engine Oil**) மற்றும் உதிரிப்பாகங்கள் அடுத்து வரவுள்ள 'இந்துருவலி' கப்பலில் எடுத்து வரப்படவுள்ளன.

யாழ்.அரச அதிபர் நேற்று இந்தத் தகவலை உதயனுக்குத் தெரிவித்தார்.

இவற்றைக் கப்பல் 'மூலம் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் எஸ்.பி.திவாரட்ண மேற்கொண்டிருந்தார் எனவும் அரச அதிபர் தெரிவித்தார்.

உதிரிப்பாகங்கள் இன்மை மற்றும் பஸ்கள் பழுதடைந்தமை காரணமாக இம்மாத இறுதிக்குள் வடபிராந்திய போக்குவரத்துச் சபையின் பஸ்சேவைகள் தடைப்படும் அபாயநிலை ஏற்பட்டுள்ளதாகச் சுட்டிக் காட்டப்பட்டிருந்தது.

இதனையடுத்து அரச அதிபர் மேற்கொண்ட நடவடிக்கை காரணமாக அவற்றை அடுத்து வரவுள்ள 'இந்துருவலி' கப்பலில் எடுத்துவர அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நடவடிக்கை எடுத்துள்ளார்.

அத்துடன் கொழும்பில் தேங்கியுள்ள 30 மெற்றிக்தொன் தபால் பொதிகளும், உணவு விவசாய ஸ்தாபனத்திற்குச் சொந்தமான மீன்பிடி உபகரணங்களும் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளரால் 'இந்துருவலி' கப்பலில் அனுப்பிவைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (அ-1-8)

## இராணுவ வாகன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருந்து மோட்டார் சைக்கிளில் வீட்டுக்குச் கூட்டிச் சென்று கொண்டிருந்தவேளை வாகன அணிக்காக மறிக்கப்பட்டிருந்தார்.

அந்தப் பகுதியில் மறிக்கப்பட்டிருந்த அரியாலையைச் சேர்ந்த அப்பாத்துரை சித்திரா (வயது 48), தண்ணீர் தாங்கியடியைச் சேர்ந்த அம்புறோஸ் யேசுதாசன்(வயது 55) ஆகியோர் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ள னர்.

இந்தச் சம்பவத்தில் காயமடைந்து யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட படைச் சிப்பாயான ஜே.எம்.ஏ.ஜெயவீர என்பவர் அங்கு மரணமானர்.

காயமடைந்த நிலையில் பலாலி ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்ட படையினரில் இருவர் அங்கு உயிரிழந்தனர். காய மடைந்த 11 சிப்பாய்கள் அங்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் யாழ். நீதிமன்றத்துக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இத்தாக்குதலில் சிக்கிய பஸ் அந்தப் பகுதியில் உள்ள வீடு ஒன்றுக்குள் புகுந்து மதில் மற்றும் அங்கு நிறுத்தி வைக்கப்பட்டிருந்த காரையும் சேதமாக்கியுள் ளது.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்ட சிறுவன் மற்றும் சிப்பாயின் மரணம் குறித்து யாழ். நீதிவான் இ.த.விக்னராஜா சம்பவ இடத்தில் விசாரணைகளை நடத்தினார். (அ-1-8-202)

## பல்கலை கல்விச் செயற்பாடுகள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

கல்விச் செயற்பாடுகள் ஆரம்பமாவதற்கு முன்னர் காலையில் பிரார்த்தனை நிகழ்வை நடத்த பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் ஏற்பாடு செய்துள்ளது.

இதேவேளை -

யாழ்.பல்கலைக்கழகச் செயற்பாடுகள் ஆரம்பமாவதை அடுத்து வெளிமாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்களும் யாழ்ப்பாணம் வருவதற்காக வவுனியா வளாகத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ளனர்.

இதுவரை 250 மாணவர்கள் பதிவுகளை வவுனியா வளாகத்தில் மேற்கொண்டுள்ளனர் என்றும் -

அவர்களைக் கப்பலில் அனுப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் - தெரிவிக்கப்பட்டது.

(அ-1-203-143-79-88-111)

**நாளை**

மாசி- 07
திங்கட்கிழமை
19.02.2007
திதி: துதியை
முன்னிரவு : 06.43
நட்சத்திரம் : பூரட்டாதி
முன்னிரவு : 11.25
சுபநேரம் : 12.32 - 02.02
ராகுகாலம் : 08.02 - 09.32

குடாநாட்டின் குட்டிச் செய்திகள் — யாழ்ப்பாணம்

## சிவராத்திரித் திருவிழாவில் கீரிமலையில் 2,500 பக்தர்கள்

யாழ்ப்பாணம், பெப்.18

கீரிமலை நகுலேஸ்வரம் ஆலயத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மகா சிவராத்திரி விழாவில் 2ஆயிரத்து 500இற்கும் மேற்பட்ட பக்தர்கள் கலந்து கொண்டதாக பலாலி பாதுகாப்பு நடவடிக்கைத் தலைமையகம் தெரிவித்தது.

இது தொடர்பாகத் தலைமையகம் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பிரசித்தி பெற்ற நகுலேஸ்வரம் ஆலயத் திருவிழா கடந்த 13 ஆம் திகதி தொடக்கம் நேற்று வரை இடம்பெற்றது. கடந்த புதன்கிழமை பாதுகாப்புப் படையினரின் சார்பில் விசேட பூசை நடைபெற்றது.

திருவிழாக்காலம் முழுவதிலும் யாழ்.நடவடிக்கைத் தலைமையக தளபதி மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பாதுகாப்பு மற்றும் வேறு தேவைகளை பாதுகாப்புப் படையினர் மேற்கொண்டனர்.

இலங்கைக் கடற்படையினரும் பாதுகாப்புப் பணிக்கு ஒத்துழைப்பு வழங்கினர். - என்றுள்ளது. (1-202)

## பருத்தித்துறையிலும் மாதா சொரூபத்திலிருந்து கண்ணீர் கசிவு

நெல்லியடி, பெ.18

பருத்தித்துறை 4ஆம் குறுக்குத்தெருவில் புனித அந்தோனியார் ஆலயத்திற்கு அண்மையில் அமைந்துள்ள வீடு ஒன்றில் மாதா சொரூபத்தில் இருந்து இரத்தம் கசிவதைப் பெருமளவான மக்கள் பார்வையிட்டு வருகின்றனர்.

குறிப்பிட்ட வீட்டில் வழிபாட்டுக்காக வைக்கப்பட்டிருந்த மாதா சிலையின் கண்களில் இருந்து நேற்று முன்தினம் இரவு சிவப்பாக கண்ணீர் கசிய ஆரம்பித்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தச் சொரூபம் வீட்டிற்கு அண்மையில் உள்ள புனித அந்தோனியார் ஆலயத்தில் வைக்கப்பட்டுள்ளது. நூற்றுக்கணக்கான மக்கள் அங்குசென்று பார்வையிட்டு வருகின்றனர்.(203-115)

## வெளி மாவட்ட அரச ஊழியர் அரச அதிபரைச் சந்திக்கின்றனர்

யாழ்ப்பாணம், பெப்.18

வெளி மாவட்டதில் மத்திய அரசுத் திணைக்களங்களில் பணியாற்றி யாழ்ப்பாணம் வந்துள்ள அரச ஊழியர்கள் தமது பிரச்சினைகள் தொடர்பாக நாளை அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடவிருக்கின்றனர்.

தமது பிரச்சினைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் அரச அதிபரிடம் அவர்கள் கையளிக்க உள்ளனர். (1)

## சமுர்த்திப் பயனாளிகளுக்கு

யாழ்ப்பாணம், பெப்.18

நவாலி வடக்கு ஜே/134 கிராம அலுவலர் பிரிவில் புதிய சமுர்த்தி முத்திரை பெறுவதற்கு விண்ணப்பம் செய்தவர்கள் இன்று காலை 8.30 மணிமுதல் 2 மணிவரை நவாலியில் உள்ள ஹேமா இல்லத்தில் பதிவுகள் மேற்கொள்ள வேண்டும் என்று நவாலி வடக்கு சமுர்த்தி அலுவலர் எஸ். சதீஷ் அறிவித்துள்ளார். (1-95)

## பல்கலையில் ஓய்வுபெற்ற ஊழியருக்கு கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,பெப்.18

யாழ்.பல்கலைக்கழகத்தின் ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கான கலந்துரையாடல் எதிர்வரும் புதன்கிழமை முற்பகல் 10 மணிக்கு பல்கலைக்கழக ஊழியர் பொது அறையில் நடைபெறவுள்ளது.

ஓய்வுபெற்ற ஊழியர்களுக்கு சில வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது தொடர்பாக இக் கலந்துரையாடலில் பிரதானமாக ஆராயப்படும் என்று பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது. (1-202)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 45 ஆம் நாள் நினைவஞ்சலியும் 27 ஆவது அகவை நிறைவும்



செல்வன்
நவரட்ணம் மனோராஜ்
(ராஜ்)

அன்னையின் மடியில் 13-02-1979 | அரக்கர்களின் பிடியில் 05-01-2007

பூ விரிந்தது போல சிரித்ததும்
கன்றுபோல ஓடித் திரிந்ததும்
சாவு விழுங்கிய சரித்திரம் ஆகுமா?
துணிவுடன் துள்ளித்திரிந்த எங்கள் ராஜ்ஜோ
ஆறுமோ உன் நினைவு எம்நெஞ்சிலே
அந்திவானம் போல கலையுமா? உன் நினைவுகள்
புல்முளைக்குமா? பேச்சுடன் போகுமா?
யார் அறிவார்?
எம் உயிர் போகும் வரை
உன் நினைவுகள் ஆறாது.

(58275)

38, அம்மன் வீதி,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

என்றும் உன் நினைவுடன்
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சீனிவாசகம் சோதிசொருபலிங்கம் (பெரியசோதி)



பலாலி மத்தியைப் பிறப்பிடமாகவும் தற்போது கோப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சீனிவாசகம் சோதிசொரூபலிங்கம் நேற்று (17.02.2007) சனிக்கிழமை காலை காலமானார்.

அன்னார் சீனிவாசகம் - அன்னமுத்து தம்பதியரின் அன்பு மகனும் பவானியின் அன்புக் கணவரும் பிரதீபா, துஷ்யந்தி, மயூரதன் (மாறன்), நிஷாந்தினி ஆகியோரின் பாசமிகு தந்தையும் வேந்தனின் மாமனும் புவனபுஸ்பகாந்தம், சொரூபலிங்கம் ஆகியோரின் அன்புச்சகோதரனும் ஸ்ரீஸ்கந்தராஜா ஜெயச்சந்திரன், வைகுந்தவாசன், சாந்தினி (அமரர்), ஜெயந்தினி, கிரிதரன் (அமரர்), சுதர்சினி, றஜனி, சிவரூபன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு மைத்துனருமாவார்.

அன்னாரின் நல்லடக்கம் இன்று (18.02.2007) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(58270)

தகவல்:
கோப்பாய். மனைவி, பிள்ளைகள் (மயூரதன், மாறன்).

### வைத்திலிங்கம் யோகராசா



அரியாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வைத்திலிங்கம் யோகராசா 16.02.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் - சிவயோகம்மாவின் சிரேஷ்ட புதல்வனும் மேனகையின் அன்புக் கணவரும் கிருஸ்ணகுமார், சாந்தகுமார், வசந்தகுமார், வசந்தகுமாரி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவரூபி, புஸ்பராணி, கினோவதனி, தயாபரன் ஆகியோரின் பாசமிகு மாமனும் அனுசாந், விந்துஜன், விவேஜினி, லிபோனி, பிரசாந், நிஷாந்தி, அனேச், லக்ஷிகா ஆகியோரின் அன்புப் பேரனும் சுந்தரலிங்கம், கிருஸ்ணவேணி, கலாவதி, காலஞ்சென்ற ராச லக்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் கனகாம்பிகை (மச்சாள்), பற்றிக், கனகரட்ணம், காலஞ்சென்ற சத்தியானந்தன் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக நாளை(19.02.2007) திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் அரியாலை சித்துப்பாத்தி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

41, வைரவர் கோயில் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.

தகவல்:
புஸ்பன்.

### திருமதி ஜெகசோதி சிவபாக்கியம்

சரசாலையைப் பிறப்பிடமாகவும் வண்ணார்பண்ணை, கலட்டியைத் தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி ஜெகசோதி சிவபாக்கியம் 17.02.2007 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இரத்தினம் - செல்லாச்சி தம்பதியரின் அருமைப்புதல்வியும் காலஞ்சென்ற ஜெயசோதியின் (ஆசிரியர், யா/வேலணை மத்திய மகா வித்தியாலயம்) அருமை மனைவியும் இராமச்சந்திரன், பாலச்சந்திரன் (ஜேர்மனி), ஞானச்சந்திரன் (கனடா), சந்திரபவானி, கலாஜோதி(கொழும்பு), திருமகள், ஞானசூரியன் (ஜேர்மனி), கலைச்செல்வி (நோர்வே) ஆகியோரின் அருமைத் தாயும் சரவணபவன், பரமேஸ்வரன் (கொழும்பு), விக்கினேஸ்வரன், நடராஜா (நோர்வே), பீற்றா (ஜேர்மனி), அருட்செல்வி (கனடா), பத்மாவதி (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும் கிரிஷான் (ஜேர்மனி), ஹாய் (ஜேர்மனி), அனுஷா (ஜேர்மனி), வாகீசன் (Pranto Lanka) லக்சன், சுஜீவன் (கொழும்பு), சுபித்தான் (கொழும்பு), நயனன், லவன், நிமலன் (நோர்வே), கவிஸ்நயன் (நோர்வே), அக்ஷதன் (நோர்வே), கௌதம் (ஜேர்மனி), பிரவின் (ஜேர்மனி), சசிறேகா (கொழும்பு), சுவர்ணறேகா(கொழும்பு), சுபித்தா (கொழும்பு), நிஷானி, ஹம்சா, ஜானு, யோகசிவா (கனடா), ஜோன் (கனடா), கிரிஷா (கனடா), கீர்த்திகா (கனடா), கீறா (கனடா) ஆகியோரின் அருமைப்பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2007) ஞாயிற்றுக் கிழமை அன்னாரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் பிற்பகல் 2மணியளவில் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
திரு.திருமதி.சரவணபவன்.
இல.35, கலட்டி அம்மன் வீதி,
யாழ்ப்பாணம்.

திரு.திருமதி பரமேஸ்வரன்
(கொழும்பு),

## போர்நிறுத்த...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்றுக்காலையில் தலதா மாளிகை முன் கூடிய பல நூற்றுக்கணக்கான பௌத்த பிக்குகள், அங்கு விசேட வழிபாடு ஒன்றை நடத்தினர்.

அதன் பின்னர் வண. தம்பர அமில தேரர் இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது குறித்தும் கொழும்பு விகாரமகாதேவி பூங்காவில் நடத்தப்பட்டு வரும் பௌத்த குருமாரின் உண்ணாவிரதம் குறித்தும் விளக்கமாகவும் விரிவாகவும் எடுத்துக்கூறினார்.

நாட்டின் நலனுக்காக பௌத்த குருமார் ஏற்கனவே மிகப் பல தடவைகள் இத்தகைய போராட்டங்களை நடத்தி இருக்கின்றார்கள்.

அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் நாட்டின் ஒருமைப்பாட்டுக்குத் தீங்கு விளைவிப்பதாகும். இந்த ஒப்பந்தம் பயங்கரவாதத்தை நாட்டில் இருந்து பூண்டோடு அழிப்பதற்குத் தடை யாக உள்ளது.

ஒப்பந்தத்தின் ஐந்து வருடம் எதிர்வரும் 21ஆம் திகதி பூர்த்தியடைகிறது. மேற்படி ஒப்பந்தம் இந்த நாட்டின் அரசியலில் பெரும் பின்னடைவை உண்டாக்கவல்லது.

ஒப்பந்தத்திற்கு ஐந்து வருடங்கள் பூர்த்தியானால் அதற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைத்துவிடும். சர்வதேச விதிகள் சில அதற்கு வகை செய்வதாக - சாதகமாக - அமைந்துள்ளன.

அதுமட்டுமன்றி விடுதலைப் புலிகளுக்கு சர்வதேச அரசியல் அந்தஸ்தைப் பெற்றுக் கொடுக்கவும் வாய்ப்பாகிவிடும்.

இவ்வாறாக நாட்டுக்கு அரசியல் ரீதியாக நாசம் விளைவிக்கவல்ல போர்நிறுத்த ஒப்பந்தம் - புரிந்துணர்வு ஒப்பந்தம்-ஐந்து வருடங்கள் பூர்த்தியாகாமல் பார்த்துக் கொள்வது மக்கள் எல்லோரதும் கடமையாகும்.

நாட்டை காப்பாற்றுவதற்காக இந்த ஒப்பந்தத்தை அரசு கிழித்தெறியச்செய் வதற்கான போராட்டத்தில் பௌத்த குருமார்களாகிய நாம் எமது உயிரை அர்ப்பணிக்கவும் தயார். ஏற்கனவே பல போராட்டங்களில் பௌத்த குருமார் நாட்டுக்காக உயிர்களைத் தியாகம் செய்த வரலாறுகள் பலவும் உண்டு

போர்நிறுத்த ஒப்பந்தத்தை அதில் ஒப்பமிட்ட இரண்டு தரப்புகளில் ஒன்று விரும்பினால் ரத்துச் செய்ய, முறித்துக்கொள்ள வசதி உண்டு. அதனால் அரசாங்கம் ஐந்து வருடங்கள் பூர்த்தியாகும், எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன்னர் அதிலிருந்து விலகிக்கொள்வதாக அறிவித்து அதனைக் கிழித்தெறிய வேண்டும்.

அவ்வாறு செய்வதாக இப்போது உண்ணாவிரதம் இருக்கும் பௌத்த துறவி களிடம் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ சார்பில் அரசுப்பிரதிநிதி ஒருவர் எழுத்து மூலம் உறுதியளிக்கவேண்டும். இல்லையேல் எமது தேசநலன் கருதிய போராட்டம் பெரிய அளவில், பரந்த அளவில் முன்னெடுக்கப்படும் - என்று வண. தம்பர அமில தேரர் பிரகடனத்தை வாசித்து விளக்கவுரை நடத்தினார். (அ-1)

## திட்டியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

குழந்தைகள், பெண்கள், சிறுவர்கள் உட்பட அனைவரும் இரவு முழுவதும் கடுங்குளிரில் மூன்று நாள்களாக உணவின்றி கடல் நீரை மட்டும் குடித்துக் கொண்டிருந்தனர்.

அதிகாலை அந்தப் பகுதிக்கு மீன் பிடிக்க வந்தவர்கள் அவர்களை காப்பாற்றி தனுஷ்கோடி பொலிஸ் நிலையத்துக்குக் கொண்டு சென்றதாக வவுனியாவைச் சேர்ந்த அகதிகளில் ஒருவரான இளம் பெண் தெரிவித்தார்.

## முன்னாள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்திய செய்தியாளர் மாநாட்டில் அரசுக்கு எதிரான கருத்துக்களை வெளியிட்டிருந்தார்.

கிழக்கில் இடம்பெறும் யுத்த நடவடிக்கைகளை விமர்சித்த அவர், இந்த நடவடிக்கையில் இரகசிய ஒப்பந்தங்கள் செய்யப்பட்டதாகவும் - அது தொடர்பான ஒலிப்பதிவு நாடாக்கள் தம்மிடம் இருப்பதாகவும் அவற்றை நாடாளுமன்றில் வெளியிடப் போவதாகவும் செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்திருந்தார்.

## வெளிமாவட்டங்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மற்றும் கொழும்பில் உள்ள 8 ஆயிரத்து 847 உணவுப் பொதிகளையும் எடுத்துவர அத்தியாவசிய நாயகம் திணைக்களத்துடன் பேச்சு நடத்தப்பட்டு வருவதாகவும் பிரதித்தபால் மா அதிபர் எம். குமரகுரு மேலும் தெரிவித்தார். (அ-1)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேலும் வெள்ளிக்கிழமை இரவு திருநாவற்குளம் பகுதியில் நடத்தப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் குமாரசாமி என்பவர் கொல்லப்பட்டுள்ளார். அவர் புளொட் அமைப்பின் முன்னாள் உறுப்பினர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றார்கள். மேற்படி மூன்று சம்பவங்கள் தொடர்பாக பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகிறார்கள். (அ-1-164)

சக்தி கல்வி நிலையம்
கன்னாகம்
A/L 2009
இணைந்த கணிதம்
S. சிவகரன்
ஆரம்பம்
18/02/2007
நேரம் 3.30 p.m.

## மரண அறிவித்தல்

### சின்னத்தம்பு தாமோதரம்பிள்ளை

கருகம்பனையைப் பிறப்பிடமாகவும் சுழிபுரம் மத்தி, சுழிபுரத்தை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பு தாமோதரம்பிள்ளை நேற்று(17.02.2007)சனிக்கிழமை காலமானார்.

அன்னார் சின்னத்தம்பு - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் மகனும் வேதையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் மருமகனும் துரியா, குகப்பிரியா, தர்சினி, விக்னா, காலஞ்சென்ற கோபிகிருஷ்ணா ஆகியோரின் தந்தையும் வைத்திலிங்கத்தின் மாமனும் ஜீலானியின் பேரனும் நித்தியானந்தன் சரஸ்வதி, சிவனேசன் ராஜேஸ்வரி, கனகரஞ்சிதன் லிங்கேஸ்வரி, சின்னத்தம்பு அம்பிகாதேவி, காலஞ்சென்ற கமலாதேவி, சிவராசா கமலாதேவி, சிவசுப்பிரமணியம் புனிதவதி ஆகியோரின் சகோதரனும் பராபரன் புஸ்பராணி, சச்சிதானந்தன் சிவபாக்கியம் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2007) முற்பகல் 11 மணிக்கு நடைபெற்று, பூதவுடல் திருவடி நிலை இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

தகவல்: குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### சோமசுந்தரம் பரமேஸ்வரி



நாகலிங்கம் வீதி, கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் இணுவில் கிழக்கை வசிப்பிடமாகவும் கொண்ட சோமசுந்தரம் பரமேஸ்வரி 16.02.2007 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னதுரை - திரவியம் தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஆறுமுகம் - முத்துப்பிள்ளை தம்பதியரின் மருமகளும் சோமசுந்தரத்தின் அன்பு மனைவியும் சுந்தரலிங்கம் (கனடா), விநாயகமூர்த்தி (சுவிஸ்), விக்கினேஸ்வரமூர்த்தி (விதுஷன் அழகு மாடம், சுன்னாகம்), கிருபாகரமூர்த்தி (U.A.E), சந்திரகுமார் (கொழும்பு), வசந்தாதேவி (டென்மார்க்), வசுமதி, சிவமதி ஆகியோரின் பாசமிகு தாயும் பிரபாசக்தி (கனடா), கலையரசி (சொக்கம்மா - சுவிஸ்), சாந்தலக்சுமி (சாந்தி), சுரேஸ்குமார் (டென்மார்க்), சோமாஸ்கந்தமூர்த்தி (மூர்த்தி), தர்மசீலன் (சிறி) ஆகியோரின் மாமியும் காலஞ்சென்ற மகாதேவன் மற்றும் அன்னலிங்கம், தேவராஜா (இத்தாலி), நாகரத்தினம் (ராசு), இராசலக்சுமி, இராஜேஸ்வரி, பூமணிதேவி, பகவதி (சுவிஸ்), காலஞ்சென்றவர்களான செல்லம்மா (இராசாத்தி), மனோன் ஆகியோரின் சகோதரியும் காலஞ்சென்றவர்களான வினாசித்தம்பி, நடராசா, செல்லையா, கனகம்மா மற்றும் சிவகாமிப்பிள்ளை, இராசம்மா, பொன்னம்மா ஆகியோரின் மைத்துனியும் பிரணவன் (கனடா), விதுஷன் (சுவிஸ்), தமிழினி (சுவிஸ்), சந்தோஷ், கவிந்தன் (டென்மார்க்), ஜனார்த்தனன், ரவிதன் ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2007) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 11 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
கணவர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
விக்கினேஸ் (மகன் - விதுஷன் அழகு மாடம், சுன்னாகம்).

சிவகாமி அம்மன் கோயிலடி,
இணுவில் கிழக்கு. (65474)

### நமசிவாயம் சரஸ்வதி (வள்ளிப்பிள்ளை)

கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி நமசிவாயம் 17.02.2007 அன்று காலமானார்.

அன்னார் நமசிவாயத்தின் அன்பு மனைவியும் தேவமலர், ரவீந்திரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும் ஆனந்தராசா (நிலா புடைவையகம், சாவகச்சேரி), சசிகலா (சுவிஸ்) ஆகியோரின் மாமியும் தாரணி, செந்தூரன், பிரதீபன், பிரசாந், பிரனேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2007) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி தனபாலசிங்கம் புவனேஸ்வரி (கோப்பாய்)



கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் கோப்பாய் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தனபாலசிங்கம் புவனேஸ்வரி 17.02.2007 சனிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னார் துரைசிங்கம் தனபாலசிங்கத்தின் (J.P) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னையா - சேதுப்பிள்ளை (மலாயன் பெஞ்சனியர்) தம்பதியரின் கனிஷ்ட புத்திரியும் காலஞ்சென்றவர்களான துரைசிங்கம் - வாலாம்பிகை தம்பதியரின் அன்பு மருமகளும் புவனசிங்கம் (கனடா), கிருஸ்ணசிங்கம் ஆகியோரின் அன்புத் தாயும் குமுதினியின் (கனடா) பாசமிகு மாமியும் அனோஜ், அபர்ணா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சிவபாக்கியம், காலஞ்சென்றவர்களான அரியரட்ணம், பரிபூரணம், மகேஸ்வரி, சேனாதிராசா, தியாகராசா, விக்னராசா ஆகியோரின் பாசமிகு சகோதரியும் காலஞ்சென்றவர்களான நடுநாயகம், கனகராசா, சரவணமுத்து, இராசரெத்தினம், சிவபாக்கியம், ஞானாம்பிகை ஆகியோரின் அன்பு மைத்துனியும் திருமதி தவறஞ்சிதமலரின் மைத்துனியும் குமாரதாஸின் சகோதரியும் திருமதி நாகராஜாவின் சம்பந்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (18.02.2007) ஞாயிற்றுக்கிழமை காலை 7மணிக்கு மஹிந்த மலர்ச்சாலையில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12மணிக்கு சமயக்கிரியைகள் நடைபெற்று, பி.ப.2மணிக்கு கல்கிசை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள்அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
T.தனபாலசிங்கம் (கணவர்),
N.சிவகுமார் (பேறாமகன்).

24C-2/1, பெரேயிரா லேன்,
கொழும்பு - 6,
தொ.பே : 4925356. (58303)

### பொன்னம்பலம் கந்தையா



(ஓய்வுபெற்ற ஆசிரியர் - கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி)

கோப்பாய் மத்தி, சோனெழுவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் கந்தையா (ஓய்வுபெற்ற ஆசிரியர்) நேற்று(17.02.2007) சனிக்கிழமை காலை சிவபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்பலம் - சின்னப்பிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் புவனாம்பாளின் அன்புக் கணவரும் காலஞ்சென்ற சுப்பிரமணியம், நல்லதம்பி (ஓய்வுபெற்ற மருத்துவர்), கார்த்திகேசு ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (18.02.2007)ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உரும்பிராய் இளங்காடு இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
க.இராஜேஸ்வரன் (பேறாமகன் - தாதிய உத்தியோகத்தர் யாழ். போதனா வைத்தியசாலை).

சோனெழு,
கோப்பாய் மத்தி. [சி-520567]

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 18.02.2007இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org